


# வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்

ரோஹண ஹெட்டிஆரச்சி

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களுக்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்கின்றபோது அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய விடயங்கள். இது ஒரு வழிகாட்டல் மாத்திரமேயன்றி நியதிச் சட்ட ஆவணமொன்றல்ல**

**1. உள்ளூர் அதிகார சபைகளுக்காக வேட்பு மனு செய்ய முடிந்த வேட்பாளர்கள்**

1. தேர்தல்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள்
2. சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் (ஒரு தனிநபர் மாத்திரம் போட்டியிட முடியாது)

**2 வேட்பு மனுக் கால எல்லை**

1. தேர்தல்கள் ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலர்கள் வேட்பு மனு கால எல்லையைப் பிரகடனப்படுத்திய தினத்திலிருந்து 14 ஆம் நாளில் ஆரம்பிக்கின்ற வேட்புமனுக் கால எல்லை 17 ஆம் நாள் நண்பகல் 12.00 மணிக்கு முடிவடையும்.

**3. வேட்பு மனு கையளிப்போடு தொடர்புடையதாக ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் முதலாம் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு வட்டாரம் சார்பாகவும் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியல்* மற்றும் இரண்டாம் பெயர்ப்பட்டியல் : வட்டாரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களுக்கு மேலதிகமாக நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற பெயர்ப்பட்டியல் என்பவற்றில் பெயர் குறிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் தொகை, பெண் வேட்பாளர்களின் தொகை, உள்ளூர் அதிகார சபை முழுவதற்கும் போட்டியிட வேண்டிய 25% இளைய வேட்பாளர்களின் தொகை, போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் அந்தந்த**

**உள்ளூர் அதிகார சபை சார்பாக வைப்புச் செய்ய வேண்டிய கட்டுப்பணத் தொகை ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்து தகவல்களும் தேர்தல் ஆணைக்குழுவினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படும்.** ፥ 28 ፥2அ * பிரிவு*

1. அரசியல் கட்சியொன்றாயின் ஒரு வேட்பாளர் சார்பாக **1500** வீதமும்

2. சுயேச்சைக் குழுவொன்றாயின் ஒரு வேட்பாளர் சார்பாக **5000** வீதமும்

என்ற வகையில் கணக்கிடப்பட்ட கட்டுப்பணத் தொகை வேட்பு மனு கையளிப்புக் காலப் பகுதியின் இறுதித் தினத்திற்கு முந்திய தினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

## 4. வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்

1. *குறித்த தேர்தலோடு தொடர்புடைய செல்லுபடியான தேருநர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தினத்தன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்*

2. *இலங்கை பிரசையொருவராய் இருத்தல்*

3. *தேர்தல் நடாத்தப்படவுள்ள (தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கின்ற) உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகைமையுள்ள ஒரு பிரசையாயிருத்தல். (பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது ஒரு கட்டாய தேவைப்பாடல்ல.) உரிய உள்ளூர் அதிகார சபை அதிகார எல்லைக்குள் சாதாரண வதிவாளர் ஒருவராயிருத்தல் வேண்டும்.*

## 5. வேட்பு மனுத் தாக்கலின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நுட்ப விடயங்கள்

1. *வேட்பு மனுத் தாக்கல் காலப் பகுதியின் இறுதித் தினத்திற்கு முந்திய தினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் உரிய கட்டுப் பணத்தை வைப்புச் செய்தல். (உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு)*

2. *வேட்பு மனுத் தாக்கல் கால எல்லைக்குள் வட்டாரப் பட்டியல் (முதலாம் வேட்பு மனு) மேலதிக பட்டியல் (இரண்டாம் வேட்பு மனு) ஆகிய இரண்டையும் ஒரே ஆவணமாகத் தயாரித்து அரசியல் கட்சியாயின் அக்கட்சியின் செயலாளரோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரோ, சுயேச்சைக் குழுவொன்றாயின் சுயேச்சைக் குழுத் தலைவரோ கையளித்தல் ( 28(5) ஆம் பிரிவு)*

3. *அதன் போது ஒரு வட்டாரத்திற்கு ஒருவர் வீதமோ பல் அங்கத்தவர் வட்டாரமொன்றாயின் அவ்வட்டாரத்திலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்கள் வீதமோ உட்சேர்க்கப்பட்டு முதலாம் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும்.*

அவ்வெண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 60% ஆகவிருத்தல் வேண்டும் .(28(2)(அ) பிரிவு)

இரண்டாம் பட்டியலைத் தயாரிக்கின்ற போது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 40%ற்கு சமமான எண்ணிக்கையோடு இன்னும் மூன்று வேட்பாளர்களை உட்சேர்த்தல் வேண்டும்.(28 (2)(ஆ) பிரிவு)

4.பெண்களின் கட்டாய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய வட்டாரப் பட்டியலில் போட்டியிடுகின்றவர்களில் (முதலாம் பட்டியலில்) 10% பெண் வேட்பாளர்களாகவிருத்தல் வேண்டும்.(28(2அ)(ஆ ) பிரிவு)

5. இரண்டாவது பட்டியலைப் பொறுத்தவரை அப்பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 50 % பெண் வேட்பாளர்களாகவிருத்தல் வேண்டும். (28(2அ)(ஆ) பிரிவு)

6. இளையோரின் உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முதலாம் பட்டியல் மற்றும் இரண்டாம் பட்டியல் ஆகிய இரண்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்த வேட்பாளர்களில் 25 % இளைஞர்கள், யுவதிகளை உள்ளடக்கியதாகவிருத்தல் வேண்டும். (இங்கு இளைஞர்கள், யுவதிகள் சம அளவில் இருக்க வேண்டுமென்பதில்லை) (28 (2அ)(ஆ) பிரிவு)

7. வேட்பாளர்கள் அனைவரும் தமது விருப்பத்தைக் காட்டுவதற்காக உரிய வேட்பு மனுவில் கையொப்பமிடல் (28(4) பிரிவு)

8. ஒவ்வொரு வேட்பாளரும் அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சத்தியம் அல்லது உறுதியுரையை முறையாக கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்தி கையளித்தல் (28(4) பிரிவு)

9. அரசியல் கட்சியொன்றாயின் அக்கட்சியின் செயலாளர், சுயேச்சைக் குழுவாயின் அக்குழுவின் தலைவர் வேட்பு மனுவில் கையொப்பமிட்டிருத்தலும் அக்கையொப்பம் சமாதான நீதவான் ஒருவரினால் அல்லது பகிரங்க நொத்தாரிஸ் ஒருவரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தலும் (28(5) பிரிவு)

10. இளம் வேட்பாளர்கள், செல்லுபடியான தேருநர் இடாப்பின் மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ஆம் தேதிக்கு (இத்தேர்தலைப் பொறுத்தவரை 2024 பெப்ருவரி மாதம் 1 ஆம் தேதிக்கு) 18 வயதுக்குக் குறையாதவராகவும், வேட்புமனுக் காலம் முடிவடைகின்ற தினத்தன்று (இத்தேர்தலைப் பொறுத்தவரை 2025 மார்ச் 20 ஆம் தேதிக்கு) 35 வயதைத் தாண்டாதவராகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உரிய வேட்பாளரின் பிறப்புச் சான்றிதழை அல்லது அவரின் பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சத்திய வெளிப்படுத்துகையை வேட்பு மனுவுடன் இணைத்திருத்தல் (28(4அ) பிரிவு மற்றும் 89 ஆம் பிரிவு)

**6. வேட்பு மனுவொன்றில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வேட்பாளர்களினதும் வேட்பாண்மை நிராகரிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற விடயங்கள்**

1. உரிய கட்டுப் பணத்தை வைப்புச் செய்யாமை (31(1)(இ) பிரிவு)

2. வேட்புமனுக் காலப் பகுதிக்குள் வேட்பு மனுப் பத்திரத்தை கையளிக்கத் தவறியமை (31(1)(அ) பிரிவு)

3. அரசியல் கட்சியொன்றாயின் அக்கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் வேட்பு மனுப் பத்திரத்தைக் கையளிக்காமை (31(1)(அ) பிரிவு)

4. சுயேச்சைக் குழுவொன்றாயின் அச்சுயேச்சைக் குழுவின் தலைவர் வேட்பு மனுவைக் கையளிக்காமை (31(1)(அ) பிரிவு)

5. முதலாம் வேட்பு மனுப் பத்திரத்தில் காணப்படுகின்ற மொத்த வட்டாரங்களுக்கான வேட்பாளர்களில் பெண் வேட்பாளர்கள் 10% என்ற ஆகக் குறைந்த எண்ணிக்கையையேனும் உள்ளடக்கியிராமை (31(1)(ஊ) பிரிவு)

6. இரண்டாம் வேட்பு மனுப் பத்திரத்தில் பெண் வேட்பாளர்கள் ஆகக் குறைந்தது 50% என்ற அதி குறைந்த எண்ணிக்கையை உள்ளடக்கியிராமை (31(1)(ஊ) பிரிவு)

7. இளைஞர் பிரதிநிதித்துவமான 25% அதி குறைந்த எண்ணிக்கை முதலாம் அல்லது இரண்டாம் அல்லது இரண்டு வேட்பு மனுக்களிலும் உள்ளடக்கப்பட்டிராமை (31(1)(ஊ) பிரிவு)

8. கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவர் வேட்பு மனுவில் கையொப்பமிடாமையும் அக்கையொப்பம் சமாதான நீதவான் ஒருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிஸ் ஒருவரால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்படாமையும் (31(1)(அ) பிரிவு)

**7. உரிய வேட்பாளர் மாத்திரம் நிராகரிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற விடயங்கள்**

1. உரிய வேட்பாளர் இளைஞர் வேட்பாளர் ஒருவராக இருக்கின்றவிடத்து தனது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஒரு பிரதியை அல்லது தனது பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் வண்ணம் கையொப்பமிடப்பட்ட சத்திய வெளிப்படுத்துகையொன்றை வேட்பு மனுவோடு இணைக்கத் தவறியமை. (31(3)(அ) பிரிவு)

2. உரிய வேட்பாளர் தனது எழுத்து மூல விருப்பத்தை வேட்பு மனுவில் கையொப்பமிடுவதனூடாக உறுதிப்படுத்தாமை (31(3)(ஆ) பிரிவு )

3. அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சத்தியம் அல்லது உறுதியுரையை கையொப்பமிட்டு முறையாக அத்தாட்சிப்படுத்தி சமர்ப்பிக்காமை அல்லது சமர்ப்பிக்கப்பட்ட சத்தியம் அல்லது உறுதியுரை நிராகரிக்கப்பட்டமை (31(3)(ஆ) பிரிவு)

இவ்வாறு நிராகரிக்கப்படுகின்ற ஒரு வேட்பாளர் இளம் வேட்பாளர் ஒருவராகவோ அல்லது பெண் வேட்பாளர் ஒருவராகவோ இருக்கின்றவொரு சந்தர்ப்பத்தில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இளம் அல்லது பெண் வேட்பாளர்களின் அதி குறைந்த எண்ணிக்கை குறையுமிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்ப இளம் அல்லது பெண் வேட்பாளர்களின் அதி குறைந்த எண்ணிக்கை உள்ளடக்கப்படாத காரணத்தினால் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய தெரிவத்தாட்சி அலுவலர்களால் வேட்பு மனுவில் உள்ள அனைத்து வேட்பாளர்களும் நிராகரிக்கப்படக் கூடும்.

## 8. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படவோ அல்லது ஏதேனும் ஓர் உள்ளூர் அதிகார சபையில் உறுப்பினர் ஒருவராக அமர்வதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ தகைமையற்ற சந்தர்ப்பங்கள் சில. (இத்தகைமையீனங்கள் எவ்வகையிலும் வேட்பு மனுவொன்று நிராகரிக்கப்படுவதோடு தொடர்புடையவையல்ல. (9 ஆம் பிரிவு)

1. இலங்கை பிரஜை ஒருவரல்லாதவராயிருத்தல்

2. வயது 18 பூர்த்தியடையாமை

3. நீதிமன்ற அலுவலர் ஒருவராக அல்லது ஆயுதப்படை அங்கத்தவர் ஒருவராக அல்லது பொலீஸ் அலுவலர் ஒருவராக அல்லது கிராம அலுவலர் போன்ற ஒரு சமாதான அலுவலர் ஒருவராகவிருத்தல்

4. தேர்தல் தினத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு முன்னரேனும் அவ்வுள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் தனது சேவையை முடிவுறுத்திக் கொள்ளாத வெளிக்கள கடமைகளை ஆற்றுகின்ற ஓர் அரச அலுவலராகவிருத்தல்

5. அரசாங்க அமைச்சொன்றில் அல்லது திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் பதவி நிலை மட்டத்திலான பதவியொன்றை வகிக்கின்ற ஒருவராகவிருத்தல்

6. பாராளுமன்ற உறுப்பினரொருவராக, அரசியலமைப்பினால் நிறுவப்பட்ட மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவராக அல்லது வேறேதேனும் உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகவிருத்தல்

7. அத்தகைய அதிகார சபையினால் உண்மையான வேலைக்கு அமர்த்தப்பட்டு அத்தகைய அதிகார சபையிடமிருந்து சம்பளம் பெறுபவரான ஓர் அலுவலராக, சேவையாளராகவிருப்பின் அல்லது அவ்வதிகார சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேதிக்கு முன்னர் ஓராண்டு காலப்பகுதிக்குள் அத்தகைய அதிகார சபையினால் அவரது தொழில் முடிவுறுத்தப்பட்ட ஆளொருவராகவிருத்தல்

8. அத்தகைய அதிகார சபைக்காக அல்லது அதன் சார்பில் எவரேனுமோர் ஆளுடன் ஒப்பந்தமொன்றை நிறைவேற்றி அனுபவிப்பவராயிருத்தல்

9. சித்த சுவாதீனமற்றவரென இலங்கையில் வலுவுடையதாகவிருக்கும் ஏதேனுமொரு சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டிருத்தல் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருத்தல்

10. சான்றளிக்கப்படாத அல்லது விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராய் அல்லது வங்குரோத்தானவராயிருத்தல்

11. பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்குரிய மறியற் தண்டனையொன்றுடன் தண்டிக்கப்படற் பாலதான தவறொன்றுக்கான மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பவராயிருத்தல் அல்லது உடன் முற்போந்த ஏழு ஆண்டு கால பகுதியின் போது அத்தகைய மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பதனைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது மரண தண்டனைக்குட்பட்டவராயிருத்தல் அல்லது மரண தண்டனை நிறைவேற்றத்திற்குப் பதிலாக அளிக்கப்பட்ட மறியற் தண்டனைத் தீர்ப்பை அனுபவிப்பவராயிருத்தல் அல்லது உடன் முற்போந்த ஏழு ஆண்டு காலப் பகுதியின் போது அத்தகைய மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பதனைப் பூர்த்தி செய்தவராயிருத்தல்

12. குற்றத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் ஒரு குற்றத்திற்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான மறியற் தண்டனையை முற்றாகவோ பகுதியாகவோ அனுபவித்து வருபவராயிருத்தல் அல்லது நேர் முற்போந்த ஐந்து ஆண்டுகளில் இவ்வாறான மறியற் தண்டனையை அனுபவித்து முடித்தவராயிருத்தல்

13. ஒரே தேர்தலுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பு மனுக்களில் வேட்பாளர் ஒருவராக பெயர் உள்ளடக்கப்பட்டிருத்தல்

14. நீதிமன்ற செயன்முறை ஒன்றினூடாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையற்றவரென தீர்மானிக்கப்பட்டிருத்தல்

**9. வெற்றியின் பின்னர் சவாலுக்குட்படுத்தப்படக்கூடிய சந்தர்ப்பங்கள்**

1൦ வருமான செலவின அறிக்கையை கையளிக்காமை, தவறான தகவல்களை வழங்கியமை, உதவு தொகை பெற முடியாதவர்களிடமிருந்து உதவு தொகையைப் பெற்றிருத்தல், செலவின மட்டுப்பாடு மீறப்படல்

2. இலஞ்சம் வழங்கியதாக நீதிமன்றத்தின் முன்னே நிரூபிக்கப்பட்டிருத்தல்

3. வேட்பாளர் உள்ளூர் அதிகார சபை எல்லைக்கு வெளியே வாக்காளராக பதிவு செய்யப்படுவதற்கான தகைமை உள்ளவரென நிரூபிக்கப்படல்

4. போட்டியிடுவதற்குத் தகைமையற்ற நிலையில் போட்டியிடல் (அரச அலுவலர்கள், பதவி நிலை அலுவலர்கள், வெளிக்கள அலுவலர்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலர்கள் ஆகியோரோடு தொடர்புடையனவும் ஏனையவைகளும் )

**ரோஹண ஹெட்டி ஆரச்சி,**

**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

**பெப்ரல்**